***செய்தி வெளியீடு எண்..54*** ***நாள்: 22.07.2021***

***மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள், சென்னையில் தட்சின் பாரத் பகுதி ஏற்பாடு செய்திருந்த "ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்" நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக பங்கேற்றார்***

*மாண்புமிகு தமிழ்நாடுஆளுநர்,* *திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள்,* *இன்று* **(22.07.2021)** *சென்னையில் தட்சின் பாரத் பகுதி ஏற்பாடு செய்திருந்த "ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்" நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக பங்கேற்று கூட்டத்தில் உரையாற்றினார்.*

*மாண்புமிகு ஆளுநர் தன் உரையில்,* **"1971** *ஆம் ஆண்டில் நமது பகைவருக்கு எதிரான நமது தேசத்தின் வெற்றியை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாழ்நாள் நிகழ்வான ஸ்வர்னிம் விஜய் வர்ஷ் நினைவு விழாவில் இந்த நேரத்தில் பங்கு பெறுவது பெருமை அளிக்கிறது.* **1971***ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரில் அடைந்த இந்த வெற்றி இந்தியா இராணுவ சாதனைகளில் ஒரு மிகச் சிறந்த மைல்கல்லாகும். இதை சாத்தியமாக்கிய துணிச்சலான இதயங்களுக்கு நன்றி செலுத்துவதற்கும் சிறப்பிப்பதற்கும் இந்தப் பொன்விழா எனக்கு ஒரு வாய்ப்பை நல்கியுள்ளது.*

*நம் நாடு உரிய பாதையில் பயணிக்கஅந்நாளில் எதிர்கொண்ட கடினமாக நிகழ்வுகளை நான் தெளிவாக நினைவில் கொண்டுள்ளேன்.*

**1971***இல் இந்தியா-பாகிஸ்தான் போரில் நாம் சரியான பாதையை நாம் தேர்ந்தெடுத்ததால் மாபெரும் வெற்றியை அடைந்ததை எண்ணி நான் பெருமிதம் அடைகிறேன். நாம் தற்போது காணும் வங்காள தேசம், இதற்கு முன்னர் இந்நிலையில் இல்லை.*

*இந்த வெற்றியானது எளிதாக கிடைத்ததன்று, இதற்காக நாம் மிகப்பெரிய விலையை கொடுத்துள்ளோம். நாட்டின் குறிக்கோளை அடைவதற்கு, பாதுகாப்பு படைகள் செய்த தியாகங்கள் இவற்றில் முதன்மையானதாகும். இந்த போரில் பங்குபெற்று வெற்றியடைவதற்கு உதவிய வீரர்களுக்கான நினைவஞ்சலி விழாவில் உங்களிடையே நானும் ஒருவராக இருப்பதை எண்ணி பெருமையடைகிறேன். ஒப்புயர்வற்ற இத்தியாகத்தை செய்த வீர மங்கைகளின் கணவர்களையும் நான் வணங்குகிறேன். வரலாற்றில் ஈடுஇணையற்ற வகையில் 1971ஆம் ஆண்டு எய்தப்பட்ட வெற்றிக்காக, போர் வீரர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.*

1971ஆம் ஆண்டு போரில் மேற்கொள்ளப்பட்ட செம்மையான பணிகள் தொடர்ச்சியாக இதன் பின்னரும், போர், தேசிய பேரிடர்கள் அல்லது அண்டை நாடுகளுக்கு அளிக்கப்படும் உதவி ஆகியவற்றில் நம் நாட்டைக் கட்டமைப்பதில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு நம் பாதுகாப்பு படைகள் செயலாற்றுவதில் உறுதியாக உள்ளன. அவர்களுக்கு நான் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அனைவரும் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு நமது பாதுகாப்பு படையினர் அவர்களின் செம்மையான பணியினை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நான் அறிவுறுத்துகிறேன்.

மேலும், அனைத்து குடிமக்களும், கொரோனா தொற்றுடன் தொடர்புடைய பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி முகக்கவசங்களை அணியுமாறும், சமூக இடைவெளிகளை பின்பற்றுமாறும் நல்ல உடல்நலத்துடன் இருக்குமாறும் இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிகழ்வில், தென்னிந்திய பகுதியின் படைத்தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் அருண் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

---

ராஜ் பவன், சென்னை -22 ஒப்பம்/-

நாள்: 22.07.2021 கூடுதல் இயக்குநர்(செவெ)

**Press Release No.54** **Date : 22.07.2021**

## **Hon'ble Governor of Tamil Nadu, Thiru. Banwarilal Purohit participated as chief guest at the "Swarnim Vijay Varsh" event organised by Dakshin Bharat Area at Chennai**

Hon'ble Governor of Tamil Nadu, Thiru. Banwarilal Purohit participated as chief guest at the "Swarnim Vijay Varsh" event organised by Dakshin Bharat Area at Chennai today (22.07.2021) and addressed the gathering.

Hon'ble Governor said, "I am proud and privileged to be here today at this once in a lifetime ceremony of Swarnim Vijay Varsh Commemoration ceremony being organised for commemoration of our nation's victory over our adversary in 1971. The victory in 1971 INDO-PAK-WAR was a great milestone in India's Military achievements and its Golden Jubilee has provided us an opportunity to thank and honour the brave-hearts who made this possible.

I vividly remember the events of that time wherein our nation was faced with the dilemma of choosing the correct path of action. I am proud that we chose the correct path which gave us the big victory in 1971 INDO-PAK-WAR and for what we now see as a flourishing Bangladesh which did not exist in this form earlier.

The victory did not come easy and we had to pay a heavy price, foremost amongst which are sacrifices made by our defence forces in attaining the national objective. I feel proud to be among all of you at this Commemoration ceremony for those who participated in this war and helped in attain the victory. I also salute our Veer Naris whose spouses made the supreme sacrifice. My sincere gratitude to all over 1971 war veterans for the victory achieved, which is unparalleled in history.

The good work of 1971 war has, thereafter, continued and our defence forces endure to rise to challenges of nation building be it in war, internal crises, national calamities or assistance to our neighbouring countries. I salute them.

I exhort all members of defence forces to continue with their good work so that all of us sleep peacefully and safety.

I take this opportunity to request all the citizens to follow corona protocol and wear masks, keep social distancing and be healthy."

On this occasion, Lieutenant General Arun, General Officer Commanding, Dakshin Bharat Area and other dignitaries participated.

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 22.07.2021 Addl. Director (PR)